[1981 ஏப்ரல் 9]

காஞ்சீபுரத்திலிருந்து பெங்களூருக்கு விரைவுப் பேருந்துப்பணி

* வினா எண். 723—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சீபுரத்திலிருந்து பெங்களூர் வரை விரைவு வண்டி விட மக்கள் கோரிக்கை மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

(ஆ) எப்போது விட உத்தேசிக்கப்பட்டுள்ளது?

(இ) மக்களின் போதிய இடவசதி முன்னிட்டு கூடுதல் விரைவு வண்டி விட ஏதாவது திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ), (ஆ) மற்றும் (இ): இதற்கான நடவடிக்கைகளை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் எடுத்து வருகிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, எடுக்க இருக்கின்ற நடவடிக்கைளின் மூலம் எத்தனை பேருந்துகள் விட ஏற்பாடு செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் 5 பேருந்துகளை 9 முறை இயக்கிக்கொண்டு வருகிறோம். இன்னும் தேவை என்று கருதப்படுமானால், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் எத்தனை முறை விட முடியுமோ அதற்கான ஏற்பாடு செய்யப்படும். கருநாடக மாநிலத்திற்கும், நம்முடைய மாநிலத்திற்கும் இடையே இருக்கின்ற ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இதை இயக்கிக்கொண்டு வருகிறோம். ஒப்பந்தத்தில் இருப்பதற்கும் மேலாக அதிகமான அளவிற்குப் பேருந்துகள் விட வேண்டும் என்று சொன்னால், இரண்டு மாநிலத்திற்கும் டாக்ஸ் செலுத்த வேண்டியிருக்கும்.

திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேருந்துகள் காஞ்சீபுரத்தில் இருந்து செல்வதாகச் சொன்னார்கள். காஞ்சீபுரம், ஆரணி, போன்ற இடங்கள் பட்டுக்குப் புகழ் பெற்ற நகரங்களாகும். அந்தப் பட்டுத் துணிகளைத் தயாரிக்கத் தேவையான மூலப் பொருள்களை பட்டு, கோரா பெங்களூரில் இருந்துதான் அந்தத் தயாரிப்பாளர்கள் பெற்று வரவேண்டியிருக்கிறது. ஆகவே, தினந்தோறும் பெங்களூர் சென்று வர வேண்டிய நிலைமையில் அங்கே அதிகமான அளவிற்குப் பயணிகள் இருக்கின்றனர். இந்தப் பேருந்துகள் சென்னையில் இருந்து வருகிற காரணத்தால், தனியாகக் காஞ்சீபுரத்தில் இருந்து, அல்லது ஆரணியில் இருந்து

காஞ்சீபுரம் வழியாக பெங்களூருக்கு புதிய பேருந்து விட அரசு முன்வருமா? திருவள்ளுவர் போக்குவரத்துக்கழகத்தின் மூலம் சாத்தியம் இல்லை என்று சொன்னாலும், சேலத்தில் இருந்து அதிகமான பேருந்துகளை அண்ணா போக்குவரத்துக் கழகம் விடுவதுபோல், காஞ்சீபுரத்தில் இருந்து தந்தை-பெரியார் போக்குவரத்துக் கழகம் மூலம் புதிய பேருந்து வசதியை பெங்களூருக்குச் செய்து தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பேருந்துக் கழகத்தின் மூலம் விடுவது என்கிற பிரச்சினை இங்கே இல்லை. எந்தப் போக்குவரத்துக் கழகமாக இருந்தாலும் அந்தப் பகுதியில் பேருந்து வசதி தேவை என்று கருதினால் விடுவதற்கு ஏற்பாடு செய்யலாம். ஆனால், இங்கேயுள்ள பிரச்சினை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் 5 பேருந்துகள் 9 முறை கருநாடக மாநிலத்தோடு அமைந்துள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையில் விடப்படுகின்றன என்பதாகும். அவர்கள் மேலும், பேருந்துகளை விடுவதற்கு ஒப்புக்கொள்ளவில்லை என்றால், நாம் விடுகின்ற கூடுதல் பேருந்துகளுக்கு, இரண்டு மாநில வரியும் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படும். இருப்பினும், மாநிலத்தில் உள்ள மக்களின் வசதியைக் கருதி, தேவைப்படின் அதைச் செய்ய அரசு தயாராக இருக்கிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, என்னுடைய மூலக் கேள்வி காஞ்சீபுரத்தில் இருந்து பெங்களூருக்கு புதிய பேருந்து விடப்படுமா என்பதாகும். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது சென்னையில் இருந்து காஞ்சீபுரம் வழியாக பேருந்துகள் செல்வதைக் குறிப்பிட்டார்கள். அந்தப் பேருந்துகள் சென்னையில் இருந்து வருவதால் காஞ்சீபுரத்தில் இருந்து செல்லும் பயணிகளுக்கு அதில் இடம் கிடைக்க வாய்ப்பு இருப்பது இல்லை. ஆகவே, காஞ்சீபுரம்-பெங்களூருக்கு இடையே அதிக அளவில் தொழில் தொடர்பு இருக்கிற காரணத்தால், அங்கேயிருந்து நேரடியாக ஒரு விரைவுப் பேருந்து விடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நானும் பதில் சொல்கிற நேரத்தில் காஞ்சீபுரத்தில் இருந்து பேருந்துகள் ஓடுகின்றன என்று சொல்லவில்லை. சென்னையில் இருந்து ஓடுகின்றன என்று தான் சொன்னேன். அந்த வகையில்தான் 5 பேருந்துகளை 9 முறை இயக்குகிறோம். அதற்கான வகையில் தான் தற்போது ஒப்பந்தம் இருக்கிறது. உங்களுடைய உணர்வுகளை கருநாடக மாநிலத்திற்கு எடுத்துச்சொல்லி, கூடுதலாகப் பேருந்துகள் விடுவதற்கு முயற்சி எடுக்கப்படும். அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லையென்றால், இரண்டு மாநிலத்திலும் டாக்ஸ் கட்டி நாம் பேருந்து ஓட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

1981 ஏப்ரல் 9]

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலேயிருந்தும், காஞ்சீபுரத்திலேயிருந்தும் பெங்களூருக்குச் செல்லும் வண்டிகள் குடியாத்தம் மார்க்கமாக செல்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பார்த்து, அந்த வழித்தடத்தைப் பார்த்த பின்னர்தான் அதைப்பற்றி முடிவு சொல்ல முடியும்.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத் தலைமை அலுவலகம்

*வினா எண். 724—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக தலைமையிடம் திருச்சிக்கு மாற்றுவதற்கு அரசிடம் திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ): ஆம். இது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. த. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, திரு வள்ளுவர் போக்குவரத்துக் கழகத் தலைமையிடத்தைத் திருச் சிக்கு மாற்றுவதற்கு எப்பொழுது அரசு நடவடிக்கை எடுத்திருக் கிறது? எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்பு கிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவரவர் களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் இன்னும் கொஞ் சம் அதிகமான பேருந்துகள் வந்த பின்பு திருச்சிக்குக் கொண்டு போகும்பொழுது பணிமனைகள் விரிவாக்கப்பட வேண்டும். இதற்கான ஏற்பாடுகளைச் செய்த பின்பு அதைப் பற்றி நட வடிக்கை எடுக்கப்படும்.

திரு. த. ஆறுமுகம் : தலைவரவர்களே, திருச்சியில் பணி மனை கட்டுவதற்கான இடம் வாங்கப்பட்டுள்ளதா? எவ்வளவு இடம் வாங்கப்பட்டுள்ளது? எப்பொழுது வேலை துவங்கப்படும் என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவரவர் களே, திருச்சியிலே இடம் எவ்வளவு வாங்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால், அங்கே இதை மாற்ற வேண்டுமென்ற கருத்து மட்டும்தான் வந்திருக்கிறது. என்னென்ன

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS